பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 27உ (13—12—67) புதன் வெளியூர்: கார்த்திகை 28உ (14—12—67) வியாழன் [இதழ்: 151

உ.பி.-யில் தமிழ்ப் பிரச்சார சபை உண்டா?

"தமிழகத்தில் தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை இருக்கிறது; அதைத் தமிழக முதலமைச்சர் அண்ணா அனுமதித்துக்கொண்டுதானிருக்கிறார்; ஆனால், உத்தரப் பிரதேசத்தில் தமிழ்ப் பிரச்சார சபையோ மலையாளப் பிரச்சாரசபையோ உண்டா?"

என்று, தி.மு.க. உறுப்பினர் இரா. செழியன், மக்களவையில் மொழி மசோதா மீது பேசுகையில் வினவினார்.

அமைச்சர்கள் கைது--

அரசியல் சட்டப் பிரச்சினையாகிறது!

'உ. பி.-க்குச் சென்றால் உங்களையும் கைது செய்வார்கள்'--சவாண், இந்திராவுக்கு எதிராக மக்களவையில் புதிய குரல்!

பழைய நடப்புகளைக் காட்டி 'நடந்திருப்பது சட்டப்படி தவறு' எனவும் வாதம்!

பிரபு நாராயண் சிங், ராம் சுவரூப் வர்மா ஆகிய சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியினைச் சார்ந்த உத்தரப் பிரதேச மாநில அமைச்சர்கள், நேற்று புதுடில்லியில்—மக்களவை வாயில்முன் போலீசாரால் கைது செய்யப்பட்டிருப்பது, பொதுத் தேர்தலுக்குப்பின் மாறியிருக்கும் அரசியல்—சட்டப் பிரச்சினைகளில் மேலும் ஒரு புதிய விவாதத்தினைத் தோற்றுவித்திருக்கிறது.

"சுதந்திர இந்தியாவில் இதுபோல் அமைச்சர்கள் கைதாவது இதுவே முதல் தடவை" என்ற செய்தியைத் தாங்கிவரும் நாளிதழ்களில்,

"நாளைக்கு நீங்கள், உத்தரப் பிரதேசத்திற்குச் சென்றால் உங்களையும் அங்கே கைது செய்வார்கள்"

என்று மது லிமாயி, மக்களவையில், இந்திரா, சவாண் ஆகியோருக்கு எதிராக அச்சுறுத்திப் பேசியிருக்கும் செய்தி உடன் பிரசுரமாகியிருப்பதும், இதுவே முதல் தடவையாகும்!

ஜார்ஜ் பெர்னாண்டஸ், மது லிமாயி ஆகிய இரு ச. சோ. கட்சி உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் இது பற்றிப் பேசியிருப்பதாவது:—

"இரு உத்தரப் பிரதேச அமைச்சர்களும், ஆட்சிமொழித் திருத்த மசோதாபற்றித் தங்கள் அரசின் குறிப்பை, குடியரசுத் தலைவர்—நாடாளுமன்ற மக்களவைத் தலைவர்—மேலவைத் தலைவர் ஆகியோரிடம் கொடுப்பதற்காகவே வந்தனர்; உ. பி. அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கையினைத்தான் அவர்கள் பிரதிபலித்துவந்தார்கள்; எனவே, அவர்களைக் கைது செய்திருப்பது, ஓர் அரசியல் சட்டப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது."

ஜனசங்க உறுப்பினர் வாஜ்பாயி பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"பழைய விந்தியப் பிரதேச அமைச்சர் ஒருவரைக் கைது செய்ய நேர்ந்தபோது, அவர் முதலில் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, பின்னரே கைதுக்கு ஆளானார்.

"அதேபோல், ஒரு போலீசுக்காரரை அறைந்த குற்றத்துக்காக நடவடிக்கை எடுக்கப்படுவதற்குமுன், உத்தரப் பிரதேச அமைச்சர் ஒருவர் முதலில் பதவி நீக்கம் செய்யப்பட்டு பின்னரே சட்டப்படி குற்றம் சுமத்தப்பட்டார்.

"சட்டம் அனைவரையும் சமமாகத்தான் மதிக்கவேண்டும்; ஆனாலும், இந்தியாவில் மாறியுள்ள மத்திய-மாநில நிர்வாகச் சூழ்நிலைகளில் இதுபோன்ற நடவடிக்கைகள், மிகுந்த யோசனைக்குப் பின்னரே எடுக்கப்பட்டிருக்க வேண்டும்."

எதிர்பார்த்த இமைகள்—ஏமாற்றத்தால் சுருங்கின!

தெரிவித்திருந்த யூகங்கள்—மணல் வீடுபோல் மறைந்தன!

'ஆகா' என்று புகழ்ந்தவர்கள், 'ஓகோ' என்று சொல்லும்படியாக அவர் திரும்பி விடுவார்—என எதிர்பார்த்தார்கள்!

புவனேசுவரத்தில் துவங்கி 'சங்லி'யில் நான்காண்டுக் காலத் தலைமைப் பதவியைத் துறக்க இருக்கும் காமராசரின் அரசியல் மேடுபள்ளங்களைப் பற்றி எழுந்துள்ள ஏராளமான கருத்துக்களிடையே 'ஸ்டேட்ஸ்மென்' இதழில் பிரபல அரசியல் விமர்சகர் இந்தர் மல்ஹோத்ரா என்பவர் தந்துள்ள மதிப்பீடு, கவனத்தைக் கவருவதாக இருக்கிறது!

காங்கிரசுக் கட்சியின் தலைமைத் தேர்தலைப் பற்றி, 'டில்லி அரங்கம்' என்ற பகுதியின் வாயிலாக எட்டுக் கட்டுரைகளைப் பெற்ற 'நம் நாடு' வாசகர்களுக்கு நாளை வெளிவரவிருக்கும் 'ஸ்டேட்ஸ்மன்' இதழில் வந்துள்ள கருத்துக்கள், இன்னும் சில சிறப்பான தகவல்களைத் தரும்!

மொழி வெறியா? இன வெறியா?

தலைநகரில் தமிழர் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர்!

தமிழ் நாளேடுகளும் வன்முறைக்குத் தப்பவில்லை!

'பாதுகாப்பு இல்லையேல் நீங்களும் நானும்கூட இரையாவோம்'--- மக்களவைத் தலைவரிடம் க. இராசாராம் முறையீடு

புதுடில்லியில் உள்ள கன்னாட் பகுதியில், தமிழர்கள், காரணம் ஏதுமின்றி வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகும் கொடுமையினை, கழகக் கொறடா க. இராசாராம், மக்களவையில் நேற்று உணர்ச்சிவயப்பட்டு எடுத்துக் காட்டியபோது, மன்றத்தில் இருந்த கணிசமான பகுதியினர்--குறிப்பாக தென்னக உறுப்பினர்கள்—கொதிப்படைந்த நிலைக்குச் சென்றார்கள்!

"'ஆங்கில எதிர்ப்பு' என்ற கவசத்தில் கிளம்பியிருக்கும் 'இந்தி சேனை' வீரர்களின் அட்டகாசங்களுக்குத் தமிழ் நாளேடுகளும் தப்பவில்லை; தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர்"

என்ற தகவலையும் திரு. க. இராசாராம் அவர்கள், அப்போது தெரிவித்திருக்கிறார்.

அவருடன் சேர்ந்து, தி. மு. க. குழுவின் துணைத் தலைவர் கி. மனோகரன், மற்றும் கே. இலக்கப்பா, ஸ்ரீகண்டன் நாயர் ஆகியோரும், 'இதுபோன்ற பாதுகாப்பற்ற தன்மை பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் உறுதிமொழி தரவேண்டும்' என்று கோரினர்.

"சம்பவங்களுக்காக நானும் வருத்தப்படுகிறேன்; 'இது பற்றி உள்துறை அமைச்சர் கவனிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன்; ஆனால், இது பற்றி விவாதிக்க அவகாசம் கொடுக்க முடியாது"

என்று அவைத் தலைவர் கூறியதைக் கேட்டுத் திருப்தியடையாத திரு. இராசாராம் அவர்கள்,

"நிலைமை இந்த அளவுக்கு வளர்ந்திருக்கும் போது, சட்டத்தையும் ஒழுங்கையும் பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை; ஆங்கிலத்தை எதிர்ப்பவர்கள், ஆங்கிலத்தையும் ஆங்கிலேயரையும் தாக்கவில்லை; தமிழர்களைத்தான் தாக்குகிறார்கள்!

"உள்துறை அமைச்சரிடமிருந்து இதுபற்றி ஓர் உறுதிமொழி வரவில்லையென்றால், நாளை நானும் நீங்களும்கூடப் பாதுகாப்பாக இருக்க முடியாத நிலைமை வரும்"

என்று மேசையைத் தட்டி அவைத் தலைவருக்கு, சம்பவங்களின் பயங்கரத்தன்மையை உணர்த்தினார்!

இதற்கு ஜனசங்கத் தலைவர் பால்ராஜ் மதோக் எதிர்ப்புத் தெரிவித்தபோது,

"இது சாதாரணமான பிரச்சினையல்ல; வேண்டுமானால் என்னுடன், சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு வாருங்கள்; 'நடந்தவை உண்மைதான்' என மெய்ப்பித்துக் காட்டுகிறேன்"

என்று இராசாராம் அவர்கள், உரிய முறையில் பதில் அளித்து அறைகூவினார்.

அடுத்துப் பேசிய சிகண்டன் நாயர்,

"புதுடில்லியில் இந்தி பேசாதவர்கள் அச்சுறுத்தல்களுக்கும், ஆபத்துக்களுக்கும் ஆளாக நேரிடுகிறது; இந்தி தெரியாதவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்கிறார்கள்; இந்தியா ஒன்றாக இருக்கப்போகிறதா? அல்லது பலவாகப் பிரியப்போகிறதா?"

எனக் கேட்டார்.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புப் பலகை எழுதுபவர்களுக்கு அடிக்கிறது யோகம்!

இந்தியத் தலைநகரில் எல்லாம் இந்தி மயம்!

புதுடில்லியில் 'போர்டு' எழுதுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 24 மணி நேரம் போதவில்லை—அந்த அளவுக்குத்தேவைப்படுகிறார்கள்!

அங்கே நடந்துவரும் ஆங்கில எதிர்ப்புப் போராட்டத்தையொட்டி எல்லா ஆங்கில அறிவிப்புப் பலகைகளும், அவசர அவசரமாக இந்தி மயமாக்கப்படுகின்றன!

குறிப்பாக, கார்—கடைகளின் சொந்தக்காரர்கள், 'நம்முடைய பொருள்களுக்குப் பாதகம் வரக்கூடாதே' என்ற பதைபதைப்பில் — அறிவிப்புப் பலகை எழுதுபவர்கள் கிடைக்கவில்லையென்றால்கூட —தற்காலிகமாக ஒரு தாளில் இந்தி எழுத்துக்களை எழுதி, கடையின் பெயர்ப் பலகைக்கோ, கார்களின் 'எண்' பிளேட்டுக்கோ பயன்படுத்துகின்றனர்!

கார்களில் உள்ள அராபிய எண்கள்கூட இந்தியிலேயே எழுதப்படுவது மாற்றத்தின் உச்சக் கட்டமாக இருக்கிறது!

உண்மைச் செய்தி

கைநாட்டுப் பெண்-- ஆனால் பள்ளிக்கூட ஆசிரியை!

எழுத்தறிவே இல்லாத பெண் ஒருவர், தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை ஆசிரியையாகப் பணிபுரிந்து கழித்திருக்கிறார்!

'யமுனா நகர்' என்ற இடத்துக்கு அருகே உள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றில் அலுவல் பார்க்கும் அப்பெண்மணி, அடுத்த ஆண்டு துவக்கத்தில் பதவிக் காலம் முடித்து ஓய்வு பெற இருக்கிறார்!

இதுவரையில் அவர், சம்பளப் பட்டியலில், கட்டை விரல் குறியிட்டுத்தான் ஊதியம் பெற்று வந்திருக்கிறார்!

பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் 11—12—67-ம் நாளிதழில் இச்செய்தி வெளியாகியிருக்கிறது.

கட்சிக் கொள்கைக்கு எதிராக கேரள ச. சோ. கட்சி உறுப்பினர்

ஆட்சி மொழி மசோதாவை ஆதரிக்க முடிவு

புதுடில்லி, டிச. 12—

"நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதாவுக்கு நாங்கள் ஆதரவளிக்க விரும்புகிறோம்; கட்சியின் போக்கையோ, கட்சித் தலைவரின் திருத்தங்களையோ ஆதரிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்"

என்று கேரளத்தைச் சேர்ந்த ச. சோ. கடசி உறுப்பினர்களான ஜி. பி. மங்களத்து மதோம், பி. விசுவநாதன், ஆரங்கில் ஸ்ரீதரன் ஆகிய மூவரும், தங்கள் கட்சித் தலைவரான மது லிமாயிக்குக் கடித மூலம் தெரிவித்திருக்கின்றனர்.

"இந்தியைப் புகுத்துவதன் மூலம் உடனடியாக ஆங்கிலத்தை ஒழிக்க எண்ணுவது இந்தி பேசாத மக்களுக்குப் பாதகமான செயலாகும்"

என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தியை வளப்படுத்துவதையோ, அதனை இந்தியா முழுவதிலும் பரப்புவதையோ நாங்கள் எதிர்க்கவில்லை என்றும், ஆனால் அதற்குரிய காலமும் சூழ்நிலையும் ஏற்பட வேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"பதினான்கு மொழிகளிலும் மத்திய அரசு ஊழியர் தேர்வுக்கான பரீட்சை நடத்தப்பட்டாலும் கூட, இந்தி பேசுபவர்களுக்குக் கிடைக்கும் சலுகை, இந்தி பேசாதவர்களுக்குக் கிடைக்காது" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தி வெறியர்களின் கண்மூடித்தனம்

காங்கிரசுத் துணைத் தலைவரே கண்டிக்கிறார்!

புதுடில்லி, டிச. 11—

"இந்தி ஒருபோதும் ஆட்சி மொழியாக வர முடியாது"

என்று மக்களவையில், நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சியின் துணைத் தலைவரான திரு. கே. அனுமந்தையா, இந்தி வெறியர்களின் கூச்சலுக்கிடையே கூறினார்.

"இந்தி பேசுவோரில் யாராவது தென்னாட்டு மொழிகளைக் கற்றதுண்டா?"

என்று அவர் வினவியபோது தி.மு.க. உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து அதை வரவேற்றனர்! இந்தி வெறியர்கள் குறுக்கிட்டுப் பேச முனைந்தனர்!

அவர் மேலும் பேசுகையில், 'இந்தி பேசுவோர், தென்னாட்டு மொழிகளைக் கற்றிராதபோதிலும் தென்னக மக்கள் இந்தியைக் கற்றுக்கொண்டிருக்கின்றனர்' என்றார்.

"பண்டித நேரு என்னைப் பார்த்து, 'இந்தி கற்றுக்கொண்டீர்களா?' என்று கேட்டார்; அதே நேரத்தில் நேருவே கன்னடத்தைக் கற்றுக்கொள்ள முயன்று, 'முடியவில்லை' என்பதை ஒப்புக்கொண்டார்" என்று அனுமந்தையா கூறினார்.

"நாட்டில் 30 சதவிகிதத்திற்கும் குறைவானவர்களே இந்தி பேசுகின்றனர்" என்று அவர் சொன்னார்.

மொழித் திணிப்பும் நமது விழிப்பும்

"எந்த மொழியையும் கற்பதில் தமிழர்கள் திறமை படைத்தவர்கள் — என்று கூறுகிறார்கள்.

"திறமை என்பது வேறு—கட்டளை வேறு! 'ஒரு மொழியை (இந்தி) படித்தால் தான் இந்தியாவில் வாழ முடியும்' என்பது கட்டளையாகும்!

"அதேபோல், படிப்பது வேறு—திணிப்பது வேறு! தாய் வலுக்கட்டாயமாகச் சோற்றைத் திணித்தால், குழந்தைகூட அதைத் துப்பிவிடும்!

"அதனால்தான், 'மொழி தொடர்பாகக் கட்டாயம் கூடாது' என்று தமிழக மாணவர்கள் ஓரணியாய்த் திரண்டு நிற்கிறார்கள்! அவர்களிடம் தமிழ்ப் பற்றையும், வளர்ச்சியையும் காண்கிறோம்!

"நாம் விழிப்புடன் இருப்பதால்தான், தாய் மொழி காக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருகிறது!"

—அறிஞர் அண்ணா

(வண்ணை சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளிவிழாவில்)

பாதுகாப்புச் செலவு ரூ. 6,000 கோடி!

பழைய மதிப்பீட்டில் ரூ. 1,000 உயர்ந்தது

1971-ஆம் ஆண்டு முடிய உள்ள கால கட்டத்திற்குப் பாதுகாப்புச் செலவு ரூ. 6,000 கோடியாக இருக்கும் என்று இப்போது மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

இத்தகவலை, பாதுகாப்பமைச்சர் சுவரண் சிங், தமது எழுத்து மூல பதிலில் தெரிவித்துள்ளார்.

1964-முதல் 1969-வரைக்குமான பாதுகாப்புத் திட்டச் செலவு ரூ. 5,000-கோடியாக மதிப்பிடப்பட்டிருந்தது; ஐந்தாண்டுத் திட்டம் மறு ஆய்வுக்குள்ளானதன் விளைவாக, 1966 முதல் 1971-வரைக்குமான ஐந்தாண்டுக்கான திட்டச் செலவில் ரூ. 1,000 அதிகரிக்கப்பட்டது.

"நாணய மதிப்புக் குறைப்பு, விலைவாசி ஏற்றம், அகவிலைப் படி உயர்வு ஆகியவை காரணமாகவே இந்தக் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது" என்கிறார் அமைச்சர்.

ஆட்சி மொழித் தீர்மானம் இதுதான்!

மொழிப் பிரச்சினை பற்றி உள்துறை அமைச்சர் சவான்; நாடாளுமன்றத்தில் முன்மொழிந்த தீர்மானம் இதுதான்:—

"அரசியல் அமைப்புச் சட்டத்தின் 343-வது பிரிவின்கீழ் இந்தியே மத்திய அரசின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். இந்தியாவில் உள்ள பலவகையான கலாச்சாரப் பிரிவினரும் பயன்படுத்தத் தக்க நிலை ஏற்பட, இந்தியைப் பரப்புவதும் அதற்கு வளமூட்டுவதும், 251-வது பிரிவின்படி மத்திய அரசின் கடமையாகும்.

எனவே இந்தியை இன்னம் விரைவாகப் பரப்பவும், வளப்படுத்தவும், விரிவானதும் முனைப்பானதுமான திட்டமொன்றை மத்திய அரசு தயாரித்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்றும், மத்திய அரசின் பல்வேறு பணிகளில் படிப்படியாக அம்மொழியை அதிகமாகப் பயன்படுத்த வேண்டுமென்றும், 'மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன—விளைந்த முன்னேற்றம் எவ்வளவு' என்பன போன்ற விவரங்களை ஆண்டுதோறும் அறிக்கையாகத் தயாரித்து அதை நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் அளிக்க வேண்டுமென்றும், அதன் பிரதிகளை எல்லா மாநில அரசுகளுக்கும் அனுப்பிவைக்க வேண்டுமென்றும் இந்த மன்றம் முடிவு செய்கிறது.

அரசியல் அமைப்பின் 8-வது பிரிவில் இந்தியைத் தவிர, இந்தியாவில் உள்ள 14 முக்கிய மொழிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டில் கல்வி—கலாசார வளர்ச்சி ஏற்பட இந்த 14 மொழிகளும் முழுமையாக வளர ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

எனவே, இந்தியுடன் கூடவே இந்த மொழிகளும் விரைந்து வளம் பெற்று புத்தறிவைப் புகட்டத் தகுதியுள்ள கருவிகளாகப் பயன்பட—மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன்—இம்மொழிகள் யாவும் இணக்கமாக வளர இந்திய அரசு ஒரு திட்டம் செய்து செயல்படுத்த வேண்டுமென்று இந்த மன்றம் முடிவு செய்கிறது.

ஒற்றுமை உணர்ச்சியை வளர்க்கவும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளவர்களும் தொடர்பு வைத்துக்கொள்ளும் வகையிலும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது தேவையாகிறது; இதற்காக மாநில அரசுகளைக் கலந்துகொண்டு, எல்லா மாநிலங்களிலும் மும்மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும்.

ஆகவே, அந்த மும்மொழித் திட்டத்திற்கு இணங்க இன்று வழக்கில் உள்ள ஓர் இந்திய மொழியைக் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்; இது, தென்னிந்திய மொழிகளுள் ஒன்றாக இருப்பது நல்லது. இந்தி பேசும் பகுதிகளில்—இந்தி, ஆங்கிலம் தவிர இந்த மொழிகளில் ஒன்றையும் கற்கவேண்டும்; இந்தி பேசாத பகுதிகளில்—வட்டார மொழிகள், ஆங்கிலத்தைத் தவிர இந்தியையும் கற்றாக வேண்டுமென்று இந்த மன்றம் முடிவு செய்கிறது.

மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில், இந்தி பேசாத பகுதியினரின் நியாயமான உரிமைகளையும் நலன்களையும் முழுமையாகக் காத்திடுவது தேவை.

எனவே,

1. குறிப்பிட்ட வேலைப் பொறுப்புக்களைத் திறமையுடன் நிறைவேற்ற நல்ல இந்தியறிவு இன்றியமையாதது என்று கருதப்படும் வேலைகளில் தவிர, மற்ற மத்திய அரசு வேலைகளுக்குத் தகுதியானவரைப் பொறுக்கும்போது, 'இந்தி தெரிந்துதான் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இராது' என்று இந்த மன்றம் முடிவு செய்கிறது.
2. அரசியலமைப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள எல்லா மொழிகளிலும், ஆங்கிலத்திலும், மத்திய அரசின் அனைத்திந்திய வேலைகளுக்கான உயர்நிலைத் தேர்வுகளை எழுதலாம். தேர்வுகளின் எதிர்கால அமைப்பு—நடைமுறைகள்—எப்போது தொடங்கலாம் என்ற விவரங்களைப் பற்றி யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் கருத்துக்களைக் கேட்டு அறிந்த பிறகு இதை அனுமதிக்கலாம் என்றும் இந்த மன்றம் முடிவு செய்கிறது."

டாலர் மதிப்புக் குறைந்து தங்கம் விலை கூடும்?

பிரெஞ்சு அதிபர் முயற்சியால் இரஷ்யாவுக்கே இலாபம்!

"மேற்கத்திய நாடுகள்மீது அமெரிக்காவுக்குள்ள அரசியல், இராணுவச் செல்வாக்கையும், அமெரிக்கப் பொருளாதார ஆதிக்கத்தையும் குறைக்க வேண்டும்" என்று பிரெஞ்சு அதிபர் டிகால் விரும்புகிறார்.

டாலர் நாணய மதிப்பு வீழ்ச்சியுற்றால், அது இரஷ்யாவுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். அதற்கு அரசியல் காரணம் மட்டுமல்லாமல், வேறு காரணமும் உள்ளது. தங்கத்தின் விலை அதிகரிக்கப்பட்டால் இரஷ்யா பெரும் பலன் பெறும்; ஏனெனில், உலகில் தங்க உற்பத்தியில் தென்னாப்பிரிக்காவுக்கு அடுத்த இடத்தில் இரஷ்யா இருக்கிறது.

"தங்கத்தின் விலையை அதிகரித்தால் அது அனைத்து நாட்டு பணப் புழக்க வசதியை அதிகரிக்கும்" என்று பிரான்ஸ் கூறுகிறது; அது அப்படி அதிகரிக்கலாம் என்றாலும், அதிகப்படியான பண வசதியை இப்போது ஏராளமாகத் தங்கம் வைத்திருக்கும் நாடுகள்தான் பெறும்; அந்த வசதி, மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிற பின்தங்கிய நாடுகளுக்குக் கிட்டாது. வேறுவிதமாகச் சொல்வதானால், பணக்கார நாடுகள் மேலும் பணக்கார நாடுகளாகும்—ஏழை நாடுகள் பழையபடி தர்மத்தைத்தான் நம்பி நிற்கும்!

தவிர, ஐரோப்பிய நிதி நிலையில், மற்ற நாடுகளுக்குப் பாதகமான வகையில் பிரான்சின் கை ஓங்கிவிடும்!

தங்கத்தின் விலையை உயர்த்தினால் உண்மையில் அனைத்து நாட்டுப் பணப் புழக்க வசதி குறையுமே தவிர, அதிகரிக்காது!

தவிர தங்கத்தின் விலையை அதிகரிக்கும்போது, டாலரின் நாணய மதிப்புக் குறையும்.

அமெரிக்காவின் மாபெரும் பொருள் உற்பத்தியை மனத்தில் கொண்டு பார்த்தால், அப்படிப்பட்ட நிலையில் அமெரிக்காவின் வர்த்தக உபரி ஐரோப்பாவுக்குப் பாதகமான வகையில் அதிகரிக்கும்; அதனால், ஐரோப்பாவின் பொருளாதாரத்தின்மீது அமெரிக்கச் செல்வாக்கு நீடிக்குமே தவிர, பிரான்சு நினைப்பதுபோல் குறையாது.

அப்படிப் பார்க்கும்போது, டாலர் மீதான பிரெஞ்சு நிர்ப்பந்தத்துக்கு அரசியல் நோக்கங்கள் உள்ளனவே தவிர, பொருளாதார நோக்கங்கள் இல்லை என்று தோன்றுகிறது.

டாலரை மட்டம் தட்டுவதால், நீண்டகால அளவில் பிரெஞ்சு, ஐரோப்பிய நலன்கள்தான் பாதிக்கப்படும்.

இந்தியின் 'யோக்கியதை' என்ன?

அம்பலப்படுத்துகிறார் சுதந்தரா உறுப்பினர்

புதுடில்லி, டிச. 11—

"ஆங்கிலத்தை எவரும் திணிக்கவில்லை; இந்தியர்கள் தாங்களாகத்தான் கற்றுக்கொண்டார்கள்; இன்றைய உலகில் ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் நன்கு வேரூன்றியுள்ளது; அதை எவராலும் ஒதுக்கிவிட முடியாது!

"இந்தி பேசுவோர் 27 சதவிகிதத்தினர்தாம்; அதைப் படிக்கத் தெரிந்தவர்கள் 0.7 சதவிகிதத்தினர்தாம் என்பது, மக்கட் தொகைக் கணக்கிலிருந்தே தெரிகிறது."

"தாழ்வு மனப்பான்மையின் காரணமாகவே ஆங்கிலத்தை எதிர்க்கிறார்கள். ஆங்கிலப் பெயர்ப் பலகைகளை அழிப்பதில், சிறுபிள்ளைகளைக் கூட ஈடுபடுத்துவது கண்டிக்கத்தக்கது"

என்று சுதந்தராக் கட்சி உறுப்பினரான திரு. பிலூ மோடி என்பவர், ஆட்சிமொழித் திருத்த மசோதாமீது பேசுகையில் குறிப்பிட்டார்.

'ஆண்டவர்'கள் மொழிக்கும்

அரசியல் சட்டத்தில் இடம்?

"கடவுளோடு தொடர்பு கொள்வதற்காக என—சமஸ்கிருதம், அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் ஒரு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா?"

என்ற கேள்வியை, மக்களவையில் மொழித் திருத்த மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய கம்யூனிஸ்டுத் தலைவர் எஸ் ஏ. டாங்கே எழுப்பினார்.

இந்தியாவில் எங்கும் பேசப்படாத அந்த மொழிக்கு, அரசியல் சட்டம் வரையில் இடம் அளித்துள்ளவர்களை அவர் குற்றஞ்சாட்டினார்!

"பலர் பல மொழிகளை, கடவுளோடு 'தொடர்பு' கொள்வதற்காகப் பயன்படுத்தும்போது, சமஸ்கிருதத்தை மட்டும் அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்திருப்பது, 'இந்து மத உணர்ச்சி'யைத்தான் புலப்படுத்தும்"

என்று அவர் கூறினார்.

"சமஸ்கிருத மொழியில் இருக்கும் 'கீதை'யைக்கூட, இந்தியாவில் விரல்விட்டு எண்ணத்தக்க மிகச் சிலரே படிக்கும் திறமை பெற்றிருக்கிறார்கள்"

என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையைக் கவிழ்க்க உதவியவருக்கு பதவி!

செல்வாக்கை இழந்த கபீர் எதிர்பார்ப்பது என்ன?

மேற்கு வங்கக் கூட்டணி அமைச்சரவையைக் கவிழ்ப்பதற்குப் பெரிதும் உதவிய பேராசிரியர் உமாயூன் கபீர் எம்.பி-க்கு அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவி அளிக்கப்படலாம் என தெரிகிறது.

பேராசிரியர் கபீருக்கு இப்போது தர்மசங்கடமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவருடைய அரசியல் கோரிக்கைகள் நிறைவேறவில்லை!

கபீர் தற்போது மேற்கு வங்காளத்தில் செல்வாக்கு இழந்திருக்கிறார்; அனைத்து இந்திய கிரந்தி தளத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்; அவரது சொந்த சகோதரர் ஜிகாங்கிர் கபீர், அவரைக் கண்டணம் செய்திருக்கிறார்.

அலிகார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியை பேராசிரியர் கபீர் ஏற்றுக்கொண்டால், அரசியலுக்குத் 'தலைமுழுக்கு'ப் போடவேண்டியிருக்கும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், அரசியல் கட்சியில் எவ்விதப் பதவியும் வகிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

"எதிர்காலத்தில் மத்திய அமைச்சரவையில் ஏதேனும் அமைச்சர் பதவி அளிக்கப்படலாம்" என்று கபீர், நம்பிக்கை இழக்காமல் இருக்கிறார்.

நிதியுதவி கேட்கும் நகராட்சிகளைக் குறைகூற இயலாது

வருவாய் தரும் தொழில்களைத் துவக்க அனுமதிப்பது பற்றி ஆராய வேண்டும்

'நிர்வாக அனுபவமிக்கவர்களின் ஆய்வுரைகளையும் கேட்போம்'—அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னையில் நடைபெற்ற நகராட்சிமன்ற நிர்வாகத் தொடர்பான கருத்தரங்கில் தமிழக உள்ளாட்சித் துறையமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஏற்கனவே வெளியாகியுள்ளது; மற்றொரு பகுதி வருமாறு:—

மக்கட் தொகைப் பெருக்கத்தின் விளைவு

"அண்மைக் காலத்தில் நகராட்சி நிர்வாகத்தில் புதியதொரு தோற்றமும், மாற்றமும் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஐம்பது—அறுபது ஆண்டுகளில், நகரங்களிடையே மக்கள் தொகைப் பெருக்கமானது மிகவும் தீவிரமாக அல்லாமல் மெதுவாக இருந்துவந்தது; ஆனால், தொழில் துறையிலே அண்மையிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக நகர்ப்புறங்களிலே மக்கள் தொகையானது வெகுவாகப் பெருகிக்கொண்டே வருகிறது.

இப்படி நகர்ப்புறங்களிலே மக்கள் அதிகமாக வந்து குவியத் தொடங்கியதால், பல்வேறு சிக்கலானப் பிரச்சினைகளை நகராட்சிமன்றங்கள் சமாளிக்க வேண்டியுள்ளது.

இப்படிப்பட்ட வளர்ச்சி நாட்டிலே ஏற்படும்போதெல்லாம், நம்முடைய தேவைகளை நிறைவு செய்கின்ற அளவுக்கு இல்லாமல் வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்ற ஒரு நிலை, நமக்கெல்லாம் வருத்தத்தைத் தரக்கூடிய அனுபவபூர்வமான ஒன்றாகும்.

நகராட்சிக்குப் பஸ் விடும் உரிமை

பேருந்துகளையும், திரைப்படக் கொட்டகைகளையும் நடத்துவதற்குச் சில நகராட்சிமன்றங்கள் அனுமதி கோருகின்றன.

நகராட்சி மன்றங்கள் இப்படிப் பட்டவைகளைச் செய்யவேண்டுமென்றால். அதற்கு முன்னால் நகராட்சிமன்றங்களின் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

அப்படித் திருத்தங்கள் கொண்டு வர முயற்சி எடுத்துக்கொள்வதற்கு முன்னால், இந்தக் கோரிக்கைகளில் உள்ள பலாபலன்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

வணிக அடிப்படையில் நடைபெறக்கூடிய வேலை முறைகளை நகராட்சிகளிடம் ஒப்படைப்பது பற்றி நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

வருங்காலத்தில் நகராட்சிகளுக்கு நல்ல பயன் அளிக்கக்கூடிய வேலைத் திட்டங்களை அவை ஏற்று நடத்துவதற்கான வழிவகைகள் தென்படுவதை நான் காண்கிறேன்.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கிய கடந்த ஓராண்டில், பல நகராட்சிகளின் வேலை முறைகளைக் கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிகளில், பல நகராட்சிமன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

கடலூர் காட்டும் வழி

கடலூரில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைந்தேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கடலூர் நகராட்சித் தலைவர், 500 கடைகளுக்குமேல் கட்ட ஏற்பாடு செய்து, மாதம் ரூ. 30 என்ற குறைந்த அளவில் அவைகளை வாடகைக்கு விடவும் செய்துள்ளார்; இதனால் நகராட்சிக்கு உறுதியான—நிலையான வருவாய் கிடைக்க ஏதுவாகிறது; மக்களுக்கும் இதனால் பயன் கிடைக்கிறது.

அதிகப்படியான கடைகள் தோன்றுவதனால், கடைக்காரர்களிடையே ஒரு பலமான போட்டி ஏற்படுகிறது; அதன் விளைவாகப் பொருள்களை வாங்குபவர்களுக்குப் பயன் விளைகிறது. வியாபாரிகளிடம் விட்டுவிட்டிருந்தால், இவ்வளவு அதிகமாகக் கடைகளை ஆரம்பிக்க அவர்கள் முன்வந்திருக்க மாட்டார்கள்.

ஒரு சில கடைகளை மட்டும கட்டி அவைகளை அதிக வாடகை விகிதத்தில் ஏலம் விடுவதைவிட—கடலூர் நகராட்சிமன்றத் தலைவரின் செயல்—நகராட்சி மன்றத்துக்கு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் அதிகப் பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது. இந்தச் செயல் பற்றி மற்ற நகராட்சிமன்றத் தலைவர்களும் சிந்திக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகளின் கோரிக்கையும் மாநில அரசின் நிதி நிலையும்

இப்படிப்பட்ட நிலையில் நகராட்சி மன்றங்கள், தங்களுடைய பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவேற்ற மேலும் நிதி கேட்டும், மானியங்கள் கோரியும் மாநில அரசினை அணுகுவார்களேயானால், நாம் அவர்களைக் குறை சொல்வதற்கில்லை.

சமுதாயத்துக்கு நகராட்சிமன்றங்கள் செய்கின்ற பணிகளின் முக்கியத்துவம் பற்றியும், அதனால் விளையும் பயன்கள் பற்றியும் நமக்கு எள்ளளவும் ஐயப்பாடு கிடையாது; ஆனால், இப்படிப்பட்ட மானியங்களும் கடன்களும் அளிப்பதில் மிகவும் தாராளமான ஒரு கொள்கையைக் கடைபிடிக்க முடியாத நிலையில், மாநில அரசின் நிதி நிலைமை அமைந்துள்ளது.

குடிநீர், வடிகால் வசதி, மற்றும் சில சிறிய வேலைகளுக்கு மட்டும்தான் மானியங்களும் கடன்களும் அளிக்க முடியுமென்று அரசு வரையறுத்துள்ளது.

நீண்ட நெடுங்காலமாக நிதி வசதி இல்லாமல் பற்றாக்குறையிலேயே அமிழ்ந்துகிடக்கும் நகராட்சி மன்றங்களுக்குத்தான் இவை அளிக்கப்படுகின்றன.

இந்தக் கடன்களை 25 முதல் 40 ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; இதற்கு 6 சதவிகித வட்டி செலுத்த வேண்டும்; அப்படித் திருப்பிக்கொடுக்கின்ற தொகை ஆண்டுத் தவணைகளுடன் சமன் படுத்தப்படுகிறது.

குடிநீர்ப் பிரச்சினை

கடந்த 13 ஆண்டுகளில் நாம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 9,10,85,100-க்குமேல் அளித்துள்ளோம்.

தற்சமயம் 61 நகராட்சிகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஆனால் பல நகராட்சிகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது போதிய அளவுக்கு இல்லை என்பதை நான் உணருகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகக் குடிநீர் வழங்குவதற்காகும் செலவு மிகவும் அதிகமாகப் பெருகியுள்ளது. குடிநீர் வழங்குவதற்குத்தான் முதலிடம் அளிக்கப்பட வேண்டும்.

விலைவாசி உயர்வுப் படி

'ஊழியரின் ஒரு பகுதியினருக்கு விலைவாசி உயர்வுப் படி அளிக்கும்போது, மற்றப் பிரிவினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அந்தச் சலுகையானது மறுக்கப்படக் கூடாது' என்ற கொள்கையை இந்த மாநிலத்தில் நாங்கள் கடைபிடித்து வருகிறோம்.

அதையொட்டி, நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் படியை அனுபவித்து வருகின்றனர்.

இருந்தாலும், அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் குறைவாக இருப்பதனால், விலைவாசி உயர்வுப் படி உயர்வினால் கிடைக்கின்ற பயனும்—அதையொட்டி—குறைவாகவே உள்ளது; இந்தப் பிரச்சினையை எப்படிப் போக்கலாம் என்பது பற்றியோ, வேறு யோசனைகளைச் சொல்லவோ நான் தயக்கப்படுகிறேன்.

'அதிகப்படியான ஊதியம் வேண்டும்' என்ற கோரிக்கையை எழுப்புகின்ற நகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசின் அனுதாபமும் அக்கறையும் என்றும் உண்டு; ஆனால் அதை நாம் செயல்படுத்தத் தடையாக உள்ளது தற்போதுள்ள நிதி நிலைமை ஒன்றுதான்.

கல்விப் பணி

நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில், இந்த மாநிலத்தில் பெரியதொரு முன்னேற்றத்தை நாம் அடைந்துவிட்டோம் என்று சொல்வதற்கில்லை.

மூன்று அல்லது நான்கு நகராட்சிகளும், 4 நகரியங்களும் சேர்ந்து மொத்தத்தில் 800 தொடக்கப் பள்ளிகளையும், 75 உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே நடத்திவருகின்றன.

தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு ஆகும் பராமரிப்புச் செலவு சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 15 ஆயிரம் ஆகிறது; உயர்நிலைப் பள்ளிக்கு ஓர் ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் ஆகிறது.

நகராட்சி எல்லைக்குள் அரசினுடைய பள்ளிகளைவிட தனியார் நடத்தும் பள்ளிகளே மிக அதிகமான அளவில் உள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்காகும் செலவு அதிகமாகிக்கொண்டே வருகிறது.

உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்று பெருவாரியான நகராட்சிமன்றங்களிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன; இந்தக் கோரிக்கைகளை, அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்து வருகிறது.

சாலை வசதி

சாலை வசதியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் எல்லா நகராட்சிமன்றங்களும் சேர்ந்து 4,200 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதைகளைப் பராமரித்து வருகின்றன.

ஒரு கிலோ மீட்டருக்கு ஆகும் பராமரிப்புச் செலவு, கிட்டத்தட்ட ரூ. 2,000 ஆகும். இங்கு மங்குமாய்ப் போடப்படுகின்ற புதிய பாதைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்துறையிலும் பராமரிப்புக்காக ஆகும் செலவு படிப்படியாக அதிகமாகிக்கொண்டே வருகிறது.

எப்படிச் சமாளிப்பது ?

நகராட்சிமன்றங்களின் நிர்வாகம் இக்கட்டான ஒரு நிலையினை அடைந்துள்ளது.

நகராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவாக உள்ளன.

இப்படிப்பட்ட நிலையில் உள்ள நகராட்சிகள், தங்களுடைய பணிகளையும் பொறுப்புக்களையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதென்பது, இயலாத ஒன்றாகும்.

பொதுமக்கள் தங்களுடைய பொறுப்புக்களைத் தக்க முறையில் அறிந்துள்ளார்கள்; தங்களுடைய சேவைகளைப் பற்றியும் அவர்கள் நாள்தோறும் வலியுறுத்திக்கொண்டே வருகிறார்கள்.

நம் முன்னால் உள்ள இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது—எப்படி மேன்மேலும் இத்துறையிலே முன்னேற்றம் காணமுடியும்—என்பது பற்றியெல்லாம் இத்துறையிலே ஆழ்ந்த அறிவும், அனுபவமும் பெற்ற நகராட்சிமன்ற நிர்வாகிகள் அனைவரும் ஒருசேர அமர்ந்து பரிசீலனை செய்ய வேண்டிய ஒரு கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம்.

அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடித்து, பொதுமக்களுக்கு மேலும் தரமான வசதிகளை அளிக்க நாம் தவறுவோமேயானால், நாம் இருந்து செயல்படுவதன் பயன்தான் என்ன என்ற வினா கட்டாயம் எழும்.

இந்த அடிப்படையிலேதான், இக்கருத்தரங்கிலே விவாதிக்கப்படுகின்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும்பற்றி, நாம் மிகவும் ஆவலுடன் ஆழ்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

நம்மை எதிர்நோக்கியுள்ள மாபெரும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற நம்பிக்கையும் உறுதியும் நமக்கு ஏற்படவேண்டும்.

நல்ல—தரமான நகராட்சி நிர்வாகம் நாட்டில் நடைபெறுவதற்கான வழிமுறைகளை நாம் வகுத்துத் தருகின்ற ஒரு நிலையில் இக்கருத்தரங்கிற்குப்பிறகு நாம் நிச்சயமாக இருப்போம் என்பதிலே எனக்கு எள்ளளவும் ஐயமில்லை."

வலியா ?

ஜலதோஷமா ?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.
am-3770

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"உள்துறை அமைச்சர் ஏதாவது ஒரு வகையில் உறுதிமொழி தரவேண்டும்"

என, கி. மனோகரன் வலியுறுத்தினார்.

"சம்பவம் எங்களுக்கும் சங்கடமளிக்கிறது; நடந்தவைகளைக் கண்டிக்கிறேன்" என இறுதியில் ஜனசங்கக் கட்சித் தலைவர் பால்ராஜ் மதோக் கூறினார்.

ஏழை உழவர்களுக்கு விளைநிலம்--வீட்டு மனை!

'பட்டா' வழங்கினார் அமைச்சர் மதியழகன்

அவிநாசி, டிச. 12—

கோவை மாவட்டம் அவிநாசி வட்டத்தில் நிலமில்லாத ஏழை உழவர்களுக்கு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், பயிரிடு நிலமும், வீட்டு மனையும் வழங்கினார்.

மொத்தம் 30 கிராமங்களைச் சேர்ந்த 530-பேருக்கு 720 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இந்த நிலத்தின் மதிப்பு ரூ. 36-இலட்சமாகும்.

297-பேர் விளைநிலமும், 233-பேர் வீட்டு மனையும் பெற்றனர்.

இவர்களில் 182-பேர் தாழ்த்தப்பட்டோர்; 72-பேர் மலைவாசிகள்; 12-பேர் முன்னாள் இராணுவத்தினர்; 264-பேர் ஏனையோர்.

வழங்கப்பட்ட விளைநிலம் மட்டும் 714 ஏக்கர் ஆகும்.

இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அம்புரோஸ் தலைமை வகித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. எம். இராசா, துரைசாமி, மற்றும் கோவை சுந்தரராசன், பி. என். எஸ். பாலு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நிலப் பட்டாக்களை வழங்கி அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பெற்ற நிலத்தை யாரும் தரிசாகப் போடக்கூடாது; வீட்டு மனைகளைக் காலியாக வைத்திருக்கக்கூடாது; விளை நிலங்களுக்கு அரசு நீர்ப்பாசன வசதி செய்து தரும்."

சேலம் உருக்காலைத் திட்டத்துக்கு மொரார்ஜி தேசாய் முட்டுக்கட்டை

ஜப்பான் உதவியைப் பெற மாநில அரசுக்கு அனுமதியில்லையாம்

புதுடில்லி, டிச. 13—

வெளிநாடுகளின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் புதிய தொழில்கள் தொடங்க மாநில அரசுகள் சில விரும்புகின்றன அல்லவா? இவ்விதம் வெளிநாடுகளுடன் நேரடியாகத் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் செய்துகொள்ள மாநில அரசுகளுக்கு, 'அனுமதி அளிக்க முடியாது' என்று துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், திட்டவட்டமாக மறுத்திருக்கிறார்.

கேரளத்தில் புதிய தொழில்கள் தொடங்க ஜப்பானின் ஒத்துழைப்பை நாடப் போவது குறித்து கேரளத் தொழில் அமைச்சர் டி. வி. தாமஸ் வலியுறுத்திவருகிறார்.

இதேபோல் சேலத்தில் எஃகுத் தொழிற்சாலை தொடங்குவதற்கு ஜப்பானின் உதவியை நாடத் தமிழக அரசும் முன் வந்திருக்கிறது.

வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தனியார் நிறுவனங்கள் தொழில்கள் தொடங்க மத்திய அரசு அனுமதி வழங்குகிறது; ஆனால் மாநில அரசுக்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன் என்பதை, மொரார்ஜி தேசாய் விளக்கவில்லை!

வேதனையுறும் மக்கள் யாராயினும் துயர் துடைக்கத் துடித்திடும் தமிழ்க் கரம்!

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு எம்.ஜி.ஆர். வழங்கும் முதல் காணிக்கை

சென்னை, டிச. 12—

"தமிழக மக்கள் பல்வேறு சோதனைகளிலே சிக்குண்டு—அல்லற்பட்டு அவலத்தைக் கண்டவர்கள்; அதை நன்கு அனுபவித்தவர்கள்; புரிந்தவர்கள்!

"எனவே, துன்பச் சுமையை நன்குணர்ந்த நாம், அந்த வேதனையை அனுபவிக்கும் மராட்டிய மாநில மக்களுக்கு அனுதாபம் காட்டவும், ஆதரவு கூறவும் கடமைப்பட்டவர்கள் ஆவோம்!

"தமிழக மக்கள் தங்கள் வேதனையைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் இந்த நேரத்தில், தங்களாலான ஒரு சிறு உதவியை மனப்பூர்வமாகச் செய்வார்கள் என்பது நிச்சயம்!

"தமிழக மக்களின் முதல் காணிக்கையாக சிறு தொகை ரூ. 10,000-த்தை—முதலமைச்சர் அண்ணா அவர்கள் மூலம்—மராட்டிய மாநில அரசுக்குத் தருகிறேன்"

என்று, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் அறிவித்துள்ளார்.

வட இந்திய மேற்குக் கடலோரப் பகுதியில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பொருட்டு, எம்.ஜி.ஆர். அவர்கள் ரூ. 10,000 வழங்கியுள்ளார். இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பது வருமாறு:—

"தமிழகத்தில் புயலும் வெள்ளமும் செய்த கொடுமைபற்றிக் கேள்விப்பட்டு, வேதனையில் துடித்துக்கொண்டிருக்கும் தமிழக மக்களுக்கு, பம்பாய் மாநிலத்தில் நடந்த நில நடுக்கம் பேரதிர்ச்சியையும், பெருங் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

"மக்கள், உலகத்தில் எந்த நாட்டில்—எங்கு வசித்தாலும், 'அவர்கள் அனைவரும் நலத்தோடு வாழ்கின்றார்கள்' என்ற நற்செய்திதான் தமிழக மக்களுக்கு மன மகிழ்வைத் தரும்; அதிலும், நம்முடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ள மராட்டிய மாநிலத்தில் இத்தகைய வேதனை—சோதனை நடந்ததைக் கேள்வியுற்று நம்மால் கண்ணீர் வடிக்காமல் எப்படி இருக்க முடியும்?"

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர்

சென்னையில் மட்டும் 3,000 குடும்பங்கள்

சென்னை, டிச. 12—

மழையினால் சென்னை நகரில் மட்டும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

சென்னை மாநகராட்சிமன்றம் 29,000 உணவுப் பொட்டலங்களைப் பாதிக்கப்பட்டவர்கட்கு வழங்கிற்று.

இன்னும் 1,500 குடும்பங்கள் இரவு நேரத்தில் மாநகராட்சிப் பள்ளிகளில் தங்கியிருக்கின்றன. பகலில் பள்ளி வகுப்புகள் வழக்கம்போல் நடக்கின்றன.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அமைச்சர்கள் மு கருணாநிதி, சத்தியவாணிமுத்து, செ. மாதவன் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறிவந்தனர்.

வானொலியில் அமைச்சர் கருணாநிதி

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு பற்றிய நிகழ்ச்சி விளக்கச் செய்திகளை, பொதுமக்கள் தொடர்புக் குழுத் தலைவரும் மாநாட்டு வரவேற்புக் குழுவின் துணைத் தலைவருமான பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், 15-12-67 மாலை 6-30 மணிக்கு வானொலியில் விளக்குவார்கள்.

சென்னை—திருச்சி — கோவை—திருநெல்வேலி முதலிய வானொலிகளில், இவ்விளக்க உரை ஒலிபரப்பப்படும்.

டில்லிக்குப் புரியாத சிறிய கணக்கு!

கல்வி மானியக் குறைப்பு--அண்ணா கண்டனம்

"இந்த ஆண்டு கல்விக்காக நான்கில் ஒரு பகுதி செலவு செய்தால், அடுத்த ஆண்டு இதே அளவு கல்விப் பணியைத் தொடர இன்னும் அதிகமான தொகை வேண்டும்.

"சிறு குழந்தைக்குச் சிறிய சட்டை வேண்டும்; அதே குழந்தை வளர்ந்ததும் பெரிய சட்டை தேவை; சட்டை ஒன்றுதான் என்றாலும் அளவு பெரியது.

"இந்தச் சிறிய கணக்குக்கூட டெல்லிக்குத் தெரியவில்லை; ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்காக ரூ. 80 கோடி தருவதாகச் சொல்லிவிட்டு, 'ரூ. 65 கோடிதான் தரமுடியும்' என்று இப்போது கூறுகிறார்கள்!

"என் கையில் பணம் இல்லாவிட்டாலும், பலம் இருக்கிறது; எனவே, பணமுடை இருந்தாலும் என்னால் இயன்றதைச் செய்வேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், வண்ணை சங்கரலிங்க நாடார் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் கூறியதாவது:—

"கல்விக்கு ஆகும் செலவு அதிகரித்தபோதிலும், 'கல்வியின் தரம் குறைந்துவிட்டது' என்று சிலர் கூறுகிறார்கள்; ஆனால் நான் அப்படிக் கருதவில்லை. முன்பிருந்த கல்விக்கும்—இப்போதுள்ள கல்விக்கும், வகையில்தான் வேறுபாடு உள்ளதே தவிர, தரத்தில் அல்ல!

"'உலகம்' வளருகிறது என்பதால், அவர்கள் கூற்றைப் பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால் அதில் பொருளில்லை!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மாபெரும் அரிசி ஆலைகள்

12 இடங்களில் நிறுவப்படும்

கோவை, டிச. 12—

"தமிழ் நாட்டில் 12 இடங்களில் மாபெரும் நெல் அரைவை ஆலைகள் அடுத்த ஆண்டு நிறுவப்படும்"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இங்கு தெரிவித்தார்.

கோவை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அமைச்சர் மேலும் கூறியதாவது:—

"இந்த 12 புதிய ஆலைகளும், நெல் அதிகமாக விளையக்கூடிய மாவட்டங்களில் தேவைக்குத் தக்கபடி அமைக்கப்படும்; இவையெல்லாம் கூட்டுறவு முறையிலேயே அமையும்.

"ஆலை ஒன்றுக்கு ரூ. 10 இலட்சம் வரை செலவாகும்.

"ஓராண்டில் 1½ இலட்சம் டன் அரிசி வரை அரைக்கும்."

நடக்க இருப்பவை

14--12--67

கரூர்

வட்ட—நகர தி.மு.க. சார்பில் மாலை 7-30 மணிக்கு இராசலிங்க மன்றத்தில்; தலைவர்: அன்பில் தர்மலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் சாதிக் பாட்சா, எம். கந்தசாமி எம்.எல்.ஏ., பெ. சௌந்தரபாண்டியன் எம்.எல்.ஏ., குளித்தலை முத்துக்கிருஷ்ணன், ஆர். என். இராமசாமி, என். ஆர். இராமசாமி, கே. கனகராசு, பரமத்தி சண்முகம்.

'காலம் கெட்டுவிட்டது' என்று வைதிகர்கள் கூறுவார்களே—அது இப்போதுதான் பொருந்தி வருவதாக எனக்குப் படுகிறது!

உத்தரப் பிரதேச மாநில அமைச்சர்கள் புதுடில்லியில் கைது ஆவதும், 'சவாண், இந்திரா ஆகியோர் லக்னோவுக்குச் சென்றால் கைது செய்யப்படுவார்கள்' என, பதிலுக்குப் பாராளுமன்றத்தில் பேசப்பட்டிருப்பதும் எதைக் காட்டுகின்றன?—அரசியலில் காலம் 'கெட்டுவருகிறது' என்பதைத்தான்! அல்லது 'மாறி வருகிறது' என்பதனைத்தான்!

எதிலும் ஓர் அனந்தத்துக்கே போய்விடுகிறார்கள்—அங்கே இருப்பவர்கள்! எல்லாமே பரிசை செய்து பார்க்கப்பட்டால்தான் அவர்களுக்கு ஒரு திருப்தி வரும்போலிருக்கிறது!

'நெருப்புச் சுடும்' என்பதை, 'தொட்டுப் பார்த்துத்தான் ஏற்றுக்கொள்வேன்' என்கிறார்கள்; நல்ல வழியாக அதைத் தடுப்பவர்களும் இல்லை; 'இதோ நெருப்பு; வேண்டுமானால் தொட்டுப் பார்த்து தெரிந்துகொள்' எனக் கூறி, தயாராக நெருப்பை எடுத்துத் தருபவர்கள்தான் இருக்கிறார்கள்!

இருதரப்பிலுமே இப்படிப்பட்டவர்கள் இருப்பதுதான் இதுபோன்ற அதிசயங்கள் நடக்க ஏதுவாகின்றன!

உத்தரப் பிரதேச அமைச்சரவையில் ஏற்கனவே ஏதோ குழப்பம்—பதவி விலகல்—என்ற நிலை ஏற்பட்டது; இந்த இலட்சணத்தில், ஆங்கிலத்தை எதிர்க்கப் புறப்பட்ட இரண்டு அமைச்சர்கள், புதுடில்லிச் சிறையினுள் அடைக்கப்பட்டிருப்பார்கள்!

மொழிப் போராட்டம் ஒருபுறமிருக்க, இதுவே மற்றொரு மாநில விவகாரமாக மாறுமல் இருந்தால் போதும்!

கல்கத்தாவில் கவர்னர் பதவியும், அதிகாரமும் சட்டப் பிரச்சினையாக ஆகியிருக்கின்றன!

அடுத்ததாக இப்போது, 'மத்திய - மாநில அமைச்சர்கள் கைது செய்யப் படலாமா, கூடாதா—என்று விவாதிக்கப் போகிறார்களாம்!

எங்கேதான் போகப்போகிறதோ—இந்திய அரசியல்!

பழைய காலத்துத் தெருக் கூத்துக்களில் பாடுவார்களே—"ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்கள்... அதிபதிகள்..." என்று—அந்த நிலைக்கு இந்தியா மீண்டும் போகாமல் இருந்தால் சரி!

—எஸ். ஆர்.

சங்கரி

தேர்தல் அலுவலகம்

சங்கரி துர்கத்தில் அமைந்துள்ள சங்கரி தொகுதித் தேர்தல் அலுவலகத்தில் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது.

தொலைபேசி எண்:

50